# වාර්ෂික වාර්තාව
# ஆண்டறிக்கை
# Annual Report 2012




## ශ්‍රම වාසනා අරමුදල

## சிரம வாசனா நிதியம்

## ShramaVasana Fund


**6 වන මහල, කම්කරු මහ ලේකම් කාර්යාලය, නාරාහේන්පිට, කොළඹ 05**

**6 ஆவது தளம்,தொழில் செயலகம், நாரஹென்பிட்டி,கொழும்பு 05.**

**6th Floor, Labour Secretariat, Narahenpita, Colombo-05.**

## பொருளடக்கம்



| | பக்கம் |
|---|---|
| **பகுதி 1** | |
| தொலைநோக்கு மற்றும் செயற்பணி | 34 |
| தொழில்,தொழில் உறவுகள் அமைச்சரின் செய்தி | 35 |
| தொழில்,தொழில் உறவுகள் பிரதி அமைச்சரின் செய்தி | 36 |
| சிரம வாசனா நிதியச் சபைத் தவிசாளரின் / தொழில், தொழில் உறவுகள் அமைச்சுச் செயலாளரின் செய்தி | 37 |
| சிரம வாசனா நிதியச் சபைப் பணிப்பாளரின் /தொழில் ஆணையாளர் அதிபதியின் செய்தி | 38 |
| சிரம வாசனா நிதியச் சபைப் பொது முகாமையாளரின் செய்தி | 39 |
| **பகுதி 2** | |
| சிரம வாசனா நிதியத்தின், லொத்தர் வருமானத்தின் முன்னேற்றம் | 40 |
| சிரம வாசனா நிதியம், சிரம வாசனா நிதியத்தின் குறிக்கோள்கள் மற்றும் அதன் பெறுகைகள் | 41 |
| சிரம வாசனா நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டப் பொழிப்பு | 42 |
| நிருவாகக் கட்டமைப்பு | 47 |
| **சிரம வாசனா நிதியத்தின் இறுதிக் கணக்கு - 2012** | |
| சிரம வாசனா நிதியத்தின் ஐந்தொகை | 49 |
| சிரம வாசனா நிதியத்தின் வருமான, செலவினக் கணக்கு | 50 |
| சிரம வாசனா நிதியத்தின் பண ஓட்டக்கூற்று | 51 |
| கணக்குக் குறிப்புகள் | 52 |
| **பகுதி 3** | |
| கணக்காய்வாளரின் அறிக்கை | 56 |

# தொலைநோக்கு

“திருப்திமிகு தொழில் படை”

# செயற்பணி

**“அனர்த்தங்களுக்கு முகம்கொடுக்கின்ற பணியாளரின் சேமநலனை மேம்படுத்துவதனூடாக சிறந்த வேலைத்தலமொன்றை உருவாக்குதல்”**



## தொழில்,தொழில் உறவுகள் அமைச்சரின் செய்தி

சிரம வாசனா நிதியத்தினால் வெளியிப்படுகின்ற ஆண்டறிக்கைக்கு தொழில் அமைச்சர் என்ற வகையில் நல்வாழ்த்துக்களுடன்கூடிய இச்செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நாடொன்றின் அபிவிருத்திக்கு பயனுறுதிவாய்ந்த, ஆக்கத்திறனுள்ள ஊழியர் படை மிகவும் ஆதரவனதொன்றாகும். சிரம வாசனா நிதியம், பயனுறுதிவாய்ந்த, ஆக்கத்திறனுள்ள மற்றும் ஆரோக்கியமான ஊழியர் படையை உருவாக்கும் நோக்கில் நாடளாவியரீதியில் பரந்த நிகழ்ச்சித்திட்டங்களை ஆற்றியுள்ளதுடன், அவற்றிற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றியுள்ளது.

பல்லாயிரக்கணக்கான உழைக்கும் மக்களின் நலன்புரிக்காக பணியாற்றுகின்ற தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளர், தொழில் திணைக்களப் பதவியினருக்கும் மற்றும் சிரம வாசனா நிதியத்தின் பதவியினருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், ஆசியாவின் அதிசயமாக இலங்கையை மாற்றுகின்றபோது இலங்கை உழைக்கும் மக்களுக்கு மிகவும் பெறுமதிமிகு சேவைகளை வழங்குவதற்கு இயலவேண்டுமென்று நான் வாழ்த்துகின்றேன்.

**காமினி லொகுகே**
கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்



## தொழில்,தொழில் உறவுகள் பிரதி அமைச்சரின் செய்தி

சிரம வாசனா நிதியத்தினால் வெளியிடப்படுகின்ற ஆண்டறிக்கைக்கு இச்செய்தியை வழங்குவதையிட்டு நான் மகிழ்வடைகின்றேன்.

சிரம வாசனா நிதியத்திற்காக தாபிக்கப்பட்ட நியதிச்சட்டக் கட்டுக்கோப்பிற்குள் இலங்கை ஊழியர் படையின் நலனுக்காக வழங்கப்பட்ட சேவைகளை நான் பாராட்டுகின்றேன். தொழிலாளர்கள் நாட்டிற்கு, தொழில்தருநர்களிற்கு மற்றும் அவர்களிற்கும் அதிர்ஸ்டத்தைக் கொண்டுவருவதில் மிகவும் முக்கிய பங்குதாரர்களாவர். அவர்களது ஊழியத்தின் அடிப்படை நன்மை சம்பளமாகக் கருதி அவர்களின் சேவை நன்மையொன்றிற்குள் மட்டுப்படுத்தப்படுகின்றது.

ஊழிய பங்களிப்புகளின் அபரீதமான உற்பத்தி முழு சமூகத்திற்குள்ளும் பரந்தளவில் ஊடுருவுகின்றது. இது எனது நம்பிக்கையாகும். நாம் சமூக விழுமியங்களை அதற்குள் உருவாக்கப்பட்டுள்ள நிதிசார்ந்தரீதியில் மட்டும் நோக்குதலாகாது. பாராட்டத்தகு வேலை நல்லெண்ணத்துடன் பாராட்டப்படுதல் வேண்டும்.

ஆகவே, அவர்களது நன்மைக்காகவும், வரையறையற்ற மதிப்புகளின் பெறுமதியேற்றமொன்றாக இந்த நிதியத்தினூடாக அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் மற்றும் சேவைகள் உண்மையான நன்றியறிதலை விபரிக்கின்ற பெறுமதிமிக்க மாதிரியொன்றாகும். இச்செயற்பாடுகளை வெற்றியடையச் செய்வதற்கு தமது சேவைப் பங்களிப்பினைச் செய்திருந்த பதவியினருக்கும், எண்ணிக்கையான சேவைகளை பரந்தளவில் வழங்குவதற்கு அவர்களுக்கு இயலவேண்டுமென நான் வாழ்த்துகின்றேன்.

**சரத் பீ.வீரசேகர**
தொழில், தொழில் உறவுகள் பிரதி அமைச்சர்



## சிரம வாசனா நிதியத்தின் தவிசாளரின் /தொழில், தொழில் உறவுகள் அமைச்சுச் செயலாளரின் செய்தி

தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற சிரம வாசனா நிதியத்தின் ஆண்டறிக்கைக்கு செய்தியை வழங்குவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

சிரம வாசனா நிதியத்தால் நாட்டிலிருக்கின்ற ஆயிரக்கணக்கான உழைக்கும் மக்களின் நலன்புரிக்காக ஆற்றிய பணி அளப்பரியது. நாடளாவியரீதியில் அவர்களுக்கான வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள், மருத்துவ கிளினிக்குகள், கண் கிளினுக்குகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்தியதன் மூலம் உழைக்கும் மக்களின் சுகாதாரம், பொருளாதாரம் மற்றும் உள வலுவினைப் பலப்படுத்துவதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பங்களிப்பு முக்கியமானதாகும்

சிரம வாசனா நிதியத்தின் குறித்த குறிக்கோள்களினூடாக இயங்குகின்ற ஆரோக்கியமான ஊழியர் படையொன்றை உருவாக்குவதற்கு மட்டுமல்ல, அவர்களின் குடும்பங்களை வலுப்படுத்துவதற்கு பேணுவதற்கும் வழங்கப்படுகின்ற சேவைகள் பாரட்டிற்குரியவை.

இந்த குறிக்கோள்களை வெற்றியடையச் செய்வதற்குத் தேவையான தலைமைத்துவத்தை வழங்கி எம்முடன் பணியாற்றுகின்ற கௌரவ தொழில்,தொழில் உறவுகள் அமைச்சர் காமினி லொகுகே அவர்களுக்கும், கௌரவ தொழில்,தொழில் உறவுகள் பிரதி அமைச்சர் சரத் பீ.வீரசேகர அவர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று, இச்செயற்பாடுகள் வெற்றி பெறுவதற்கு தங்களது உதவிகளை வழங்கிய தொழில், தொழில் உறவுகள் அமைச்சினதும் மற்றும் தொழில் திணைக்களம் உள்ளடங்கலாக ஏனைய நிறுவனங்களினதும் அனைத்துத் தலைவர்களுக்கும், பதவியினருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், சிரம வாசனா நிதியத்தின் அபிவிருத்திக்காக ஒப்பிடமுடியாத சேவைகளை வழங்குகின்ற பொது முகாமையாளர் உள்ளடங்கலான அனைத்து பதவியினருக்கும் எனது நன்றிகள்.

டபிள்யு.ஜே.எல்.யு.விஜயவீர
**செயலாளர்**



# ிரம வாசனா நிதியச் சபைப் பணிப்பாளரின் (தொழில் ஆணையாளர் அதிபதி) செய்தி

சிரம வாசனா நிதியத்தின் ஆண்டறிக்கைக்கு நல்வாழ்த்துச் செய்தியை வழங்குவது எனது அதிர்ஷடமாகும்.

1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதியச் சட்டம், தனியார் துறையில் பணியாளருக்கான நலன்புரி ஏற்பாடு என்ற பிரதான நோக்கத்துடன் சட்டவாக்க மாக்கப்பட்டிருந்தது. இதன்படி, பணியாளரின் தாபனங்கள் முன்னறிவித்தலின்றி மூடப்படுகின்ற போது, அத்தகைய தாபனங்களின் பணியாளர்களுக்கு நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குவதாகும். அவசர சந்தர்ப்பத்தின்போது, பணியாளர்களுக்கு மருத்துவ மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதல், அனர்த்தத்தின்போது பணியாளர்களுக்கும் அவர்களில் தங்கியிருப்போருக்கும் நிதி மற்றும் ஏனைய நன்மைகளை வழங்குதல் போன்றவை இந்நிதியத்தினால் வழங்கப்படுகின்ற பெறுமதிமிகு சேவை களாகும். அதேபோன்று, இச்சட்டம் புலமைப் பரிசில்களை வழங்குதல், நன்கொடைகளை, உதவிகளை அளித்தல் மற்றும் பணியாளர்களின் நலன்புரிக்காக விசேட சேவைகளை வழங்கியுள்ள பணியாளர்களைக் கௌரவிப்பதற்கான ஏற்பாட்டினைக் கொண்டிருக்கின்றது.

தெரிவிக்கப்பட்ட குறிக்கோள்களின் வெற்றிக்காக சிரம வாசனா நிதியத்தை பலப்படுத்துதல் அவசியமாகும். இந்த விடயத்திற்காக நாடளாவியரீதியில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித் தமையூடாக சிரம வாசனா நிதியப் பதவியினரால் வழங்கப்பட்ட பங்களிப்புப் பாராட்டத்தக்கதாகும். கூறப்பட்ட செயற்பாடுகள் வெற்றி பெறுவதற்கு நாடாளவியரீதியில் அமைந்திருக்கின்ற பிரதி தொழில் ஆணையாளர் அலுவலகங்கள், மாவட்ட, உப தொழில் திணைக்கள அலுவலகங்களின் தேவையான ஒருங்கிணைப்பினை பெறுவதனூடாக மருத்துவ கிளினுக்குகள், பணியாளர்களின் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதன் மூலம் பணியாளர்களின் நலன்புரியை மேம்படுத்துவதற்காக எடுக்கப்படுகின்ற முயற்சிகள் போற்றத்தக்கவையாகும்.

இதற்குமேலதிகமாக, சிரம வாசனா நிதியமானது, சிரம வாசனா லொத்தரினூடாக பெறப்படுகின்ற வருமானங்களை அதிகரிப்பதனூடாக நலன்புரி செயற்பாட்டினை சமுதாயத்திற்கு மேம்படுத்தலாம் என்ற கருத்தை நான் கொண்டிருக்கின்றேன். புகைப்பிடித்தல், போதைப் பொருள் பாவனை வெற்றிலை பாக்கிடுதல் போன்ற அத்தகைய பயனற்ற செலவுகளைக் குறைப்பதன் மூலம், இந்தப் பணத்தை சிரம வாசனா லொத்தர் போன்ற ஆக்கத்திறன் நோக்கத்திற்காக முதலிடுவதானது, சிரம வாசனா லொத்தர் விற்பனையை மேம்படுத்தி நிதியத்தைப் பலப்படுத்தும் என்பதுடன் இது, சமுதாய நலன்புரிச் செயற்பாடுகளைப் பொறுப்பேற்பதற்கான சாத்தியத்தை மேலும் செம்மைப்படுத்துகின்றது. இது, தொழிலில் ஈடுபடுகின்ற பணியாளர்களின் பாரட்டிற்குரிய உண்மையான காரணங்களாகும். சிரம வாசனா நிதியத்திற்கு நல்வாழ்த்துக்களும், வெற்றிகளும் கிட்டுவதாக.

திருமதி பேள் வீரசிங்க
**சிரம வாசனா நிதியப் பணிப்பாளர்**
**தொழில் ஆணையாளர் அதிபதி**



## சிரம வாசனா நிதியச் சபைப் பொது முகாமையாளரின் செய்தி

இலங்கையிலிருக்கின்ற பல்லாயிரக்கணக்கான உழைக்கும் மக்களின் சேமநலனை அதிகரிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட சிரம வாசனா நிதியத்தின் 2012 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கைக்கு இச்செய்தியை வழங்குவதையிட்டு நான் மகிழ்வடைகின்றேன்.

1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்தின் கீழ், இலங்கையின் தற்போதைய அதிமேதகு சனாதிபதியும் அன்றைய தொழில் அமைச்சருமாகிய மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் எண்ணக்கருவிற்கமைவாக தாபிக்கப்பட்ட சிரம வாசனா நிதியத்தின் குறிக்கோள், ஊழியர் படையின் பொருளாதார நிலைமையை பலப்படுத்துதல் மற்றும் பல்லாயிரக்கணக்கான உழைக்கும் மக்களின் நலன்புரியினை மேம்டுத்துதல் மூலம் திருப்திகரமான ஊழியர் படையொன்றை உருவாக்குவதாகும். அபிவிருத்திச் தேசிய லொத்தர் சபையுடன் ஒருங்கிணைந்த ''ஜாதிக சம்பத'' இந்த நிதியத்தின் அபிவிருத்தித் செயற்பாடுகளுக்கு பண ஏற்பாடுகளை வழங்குகின்றது. பணியாளர்களின் நலன்புரியினை மேம்படுத்துதல், பணியாளர்களின் நிறுவனங்கள் முன்னறிவித்தலின்றி மூடப்படுகையில் அத்தகைய நிறுவனங்களின் பணியாளர்களுக்கு நிதி உதவியையும், ஏனைய உதவியையும் வழங்குதல் போன்ற அத்தகைய பிரதான குறிக்கோள்களினூடாக பணியாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

சிரம வாசனா நிதியம், ஒட்டுமொத்த உழைக்கும் மக்களை மட்டுமல்ல அவர்களின் குடும்பங்களையும் வலுப்படுத்துவதற்கும் பேணிப்பாதுகாப்பதற்கும் தற்போது ஐந்து ஆண்டு கூட்டுத் திட்டமொன்றை வகுத்தமைத்துள்ளது. அதேபோன்று, நாடளாவியரீதியல் பரந்து வாழ்கின்ற சேவை நாடுநர்களுக்கு மிகவும் பயனுறுதிவாய்ந்த சேவையை வழங்குவதற்கும், விலைவிபரப் பலகையையும், இந்த நிதியத்தின் செயற்பாடுகளைப் பரவலாக்குவதனால் பொது மக்களுக்கு தகவலைப் பரவலாக்குவதற்கான தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்துவதற்கும், இணையத்தளமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, மருத்துவ, கண் கிளினிக்குகளை நடத்துதல், உழைக்கும் மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்துதல், மாவட்டங்களின் பல பிரதேசங்களை உள்ளடக்கும் வகையில் தொழில் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பில் பணியாளர்களுக்கு அறிவினை ஏற்படுத்துதல் போன்ற அத்தகைய பெருமளவு எண்ணிக்கையிலான நிகழ்ச்சித்திட்டங்களை ஆற்றி இலங்கை உழைக்கும் மக்களின் உழைப்பு ஆக்கத்திறனை செம்மைப்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதில் உதவுதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


பல்லாயிரக்கணக்கான உழைக்கும் மக்களின் சேமநலனை மேம்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட இந்த நிதியத்தின் தாபகரான, உழைக்கும் மக்களின் துயரங்களை இனங்காணக்கூடிய உணர்வுள்ளவரான அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும், இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் அனைத்தையும் நடைமுறைப்படுத்துவதற்கு வழிகாட்டலை வழங்கியிருந்த தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் கௌரவ காமினி லொகுகே அவர்களுக்கும், தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளர் திரு.டபிள்யு.ஜே.எல்.யு.விஜயவீர அவர்கள் உள்ளடங்கலாக அமைச்சின் அனைத்துப் பதவியினருக்கும், சிரமவாசனா நிதியத்தின் தவிசாளர் உள்ளடங்கலாக தொழில் திணைக்களத்தினதும், சிரம வாசனா நிதியத்தினதும் அனைத்துப் பதவியினருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**டி.ஆர்.ஜயலத்**
பொது முகாமையாளர்
சிரம வாசனா நிதியம்

வரைபடம் 1

<u>சிரம வாசனா நிதியத்தின் முன்னேற்றம்</u>


| | 2008 (மில்லியன்) | 2009 (மில்லியன்) | 2010 (மில்லியன்) | 2011 (மில்லியன்) | 2012 (மில்லியன்) |
|---|---|---|---|---|---|
| நிதியத்தின் மொத்தப் பெறுமதி | 87 | 118 | 148 | 187 | 234 |
| நிதியத்தின் முன்னேற்றம் | 27 | 31 | 30 | 39 | 47 |




வரைபடம் 2

<u>லொத்தர் வருமானம்</u>

| | 2008 (மில்லியன்) | 2009 (மில்லியன்) | 2010 (மில்லியன்) | 2011 (மில்லியன்) | 2012 (மில்லியன்) |
|---|---|---|---|---|---|
| வருமானம் | 23 | 26 | 28 | 39 | 49 |
| வருமானத்தின் முன்னேற்றம் | 6 | 3 | 2 | 11 | 10 |



## சிரம வாசனா நிதியம்

1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சிரம வாசனா நிதியம், தொழில் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற,உழைக்கும் மக்களின் சேமநலனுக்காக ஆரம்பிக்கப்பட்ட தாபனமொன்றாகும். சிரம வாசனா நிதியத்தின் 06 குறிக்கோள்களினூடாக ஆரம்பத்திலிருந்து இன்று வரை இலங்கையில் பணியாளர்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு சேமநல நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சிரம வாசனா நிதியத்தின் பிரதான வருமான மூலமாக தேசிய லொத்தர் சபையினால் வழங்கப் பட்ட பங்களிப்பு 'ஜாதிக சம்பத'' லொத்தர் விற்பனையுடன் அதிகரித்துள்ள அதேவேளையில், இந்த வருமான அதிகரிப்பு பணியாளர்களின் சேமநலனை நோக்கிய சேவைகளை ஆற்றுவதனை மேம்படுத்தியுள்ளது.

## சிரம வாசனா நிதியத்தின் குறிக்கோள்கள்

(அ) பணியாளர்களின் சேமநலனை மேம்படுத்துதல்.

(ஆ) மக்கள் பணிபுரிகின்ற தாபனங்கள் மூடப்படுகையில் அத்தகைய தாபனங்களில் பணிபுரிந்த பணியாளர்களுக்கு நிதிசார் மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதல்.

(இ) அவசர நிலைமையின்போது பணியாளர்களுக்கு மருத்துவ மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதல்.

(ஈ) பணியாளர்களுக்கெதிரான ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்படுகின்றபோது தற்காலிக உதவிகளை வழங்குதல்.

(உ) அனர்த்தங்களின்போது அவர்களுக்கும், அவர்களில் தங்கியிருப்போர்களுக்கும் நிதி மற்றும் ஏனைய சேவைகளை வழங்குதல்.

(ஊ) பணியாளர்களின் சேமநலனுக்காக சிறந்த சேவைகளை வழங்குபவர்களைக் கௌரவித்தல்.

## சிரம வாசனா நிதியத்தின் பெறுகைகள்

(அ) நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கக்கூடியவாறான அனைத்துப் பணத்தொகை.

(ஆ) உள்நாட்டு, வெளிநாட்டு மூலங்களின் மானியங்கள், நன்கொடைகள் மற்றும் அன்பளிப்புகளி லிருந்து கிடைக்கப்பெறுகின்ற அனைத்துப் பணத்தொகை.

(இ) நிதியத்தினால் முதலீடு செய்வதனூடாக வருமானமாகப் பெறப்படுகின்ற பணம்.

((ஈ) 13 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள லொத்தர்களினால் பெறப்பட்ட பணம் உள்ளடங்கலாக இந்தச் சட்டத்தின் கீழ் உரித்தளிக்கப்பட்ட தொழிற்பாட்டு மற்றும் வலுப்படுத்தல் தத்துவத்தை நிறைவேற்றுவதில் பெறப்பட்ட அனைத்துப் பணம்.

சிரம வாசனா நிதியம், தனியார் துறை பணியாளர் களை உள்ளடக்குவதற்காக தாபிக்கப்பட்டுள்ள துடன், சுயவேலைவாய்ப்பில் லீடுபவர்களை இச்சட்டம் உள்ளடக்கியிருக்க வில்லை. சிரம வாசனா நிதியம், மட்டுப்படுத்தல் களுடன் அதன் நிதி இயலுமையின் கீழ் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்து கின்றது.

இந்த மட்டுப்படுத்தல்களுக்கு அப்பால் நிதி இயலுமையை செம்மைப்படுத்தி 2012 ஆம் ஆண்டில் இது சேவைகளை மேலும் விரிவுபடுத்தி யிருக்கின்றது.

## சிரம வாசனா நிதிய நிகழ்ச்சித்திட்டத்தின் பொழிப்பு

இலங்கையில் உள்நாட்டுப் பிரச்சனை மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நிலவியிருந்ததுடன், 2009 ஆம் ஆண்டில் பிரச்சனை முடிவடைந் திருந்ததுடன், தற்போது மிகவும் பாதுகாப்பான சூழல் மற்றும் அரசியல் ஸ்திரம் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் விரைவாக வளர்ச்சி அடைந்துள்ளது.

இதன் விளைவாக, இலங்கையில் அதிகளவான வெளிநாட்டு முதலீடுகள் செய்யப்பட்டு அதன் காரணமாக இலங்கையில் வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்கள் அதிக எண்ணிக்கையில் அதிகரித் துள்ளது. இது இலங்கையின் தொழிற்படையை அதிகரிப்பதற்கு உதவியுள்ளதுடன், இது தற்போது 8.5 மில்லியனாகும்.

சிரம வாசனா நிதியத்தினால் வெவ்வேறு குறிக்கோள்களினூடாக நடைமுறைப்படுத்தப்படு கின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் அதன் 6 குறிக்கோள் களினூடாக பணியாளர்களின் சேமநலனை அதிகரிப்பதற்கு உதவுவதுடன், அவை வெவ்வேறு குறிக்கோள்களினூடாக நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தன.

(அ) பணியாளர்களின் சேமநலனை மேம்படுத்துதல் :

1. சர்வதேச மகளீர் தினக் கொண்டாட்டத்தையொட்டி பணியாளர்களின் சேமநலனை மேம்படுத்துவதை நோக்கி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியமை. (செலவினம் - 302,000 ரூபா)

2. பணியாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துதல்.



பணியாளர்களுக்காக பியகமவில் நடத்தப்பட்ட விழிப்புணவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

(அ) அவசர தேவையின்போது பணியாளர்களுக்கு மருத்துவ மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்



அனுராதபுர மாவட்டத்தில் பணியாளர்களின் சுகாதாரத்தை அதிகரிப்பதற்காக பணியாளர்களுக்கு மருத்துவ கிளினிக் மற்றும் கண் கிளினிக்கை நடத்துதல்

(இ) பணியாளர்களுக்கெதிராக ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்படுகின்றபோது அவர்களுக்கு தற்காலிக உதவிகளை வழங்குதல்.

சட்ட உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தகுதியுடையவர்களாயிருந்த 18 விண்ணப்பதாரிகளுக்கு உதவி வழங்கியமை ( செலவீனம் : 76,350/- ரூபா)

(ஈ) அர்த்தத்தின்போது, பணியாளர்களுக்கும், அவர்களில் தங்கியிருப்பவர்களுக்கும் நிதிசார் மற்றும் ஏனைய நன்மைகளை வழங்குதல்

விபத்தினால் ஏற்பட்ட மரணத்தில் அறந்த பணியாளர்களின் சிறுவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்குதல்.



தொழிலில் ஈடுபட்டிருக்கையில் முழுமையாக இயலாமையடைந்த மற்றும் விபத்தினை எதிர்கொண்ட பணியாளர்களின் சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

- சிரம வாசனா நிதியத்தையும், அதன் குறிக்கோள்களையும் பொது மக்களிடம் பிரபல்யப்படுத்தும் நோக்கில் புதிய இணையத் தளத்தை அங்குரார்ப்பணம் செய்தல்



- சிரம வாசனா நிதியத்தையும், அதன் குறிக்கோள்களையும் பொது மக்களிடம் பிரபல்யப்படுத்தும் நோக்கில் சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்




சந்தைப்படுத்தலை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டம்

- சிரம வாசனா நிதியத்தின் குறிக்கோளை நிறைவேற்றும் நோக்கில் வாழ்க்கைத்தொழில் பயிற்சி அதிகாரசபைக்கும், சிரம வாசனா நிதியத்திற்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட இரு தரப்பு உடன்படிக்கை



VTA நிறுவகத்திற்கும், சிரம வாசனா நிதியத்திற்கும் இடையில் இடம்பெற்ற இரு தரப்பு உடன்படிக்கை

- சிரம வாசனா நிதியத்தின் அனுசரணையின் கீழ் ஜாதிக சம்பத லொத்தரை வெற்றிகொண்டவருக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு




சிரம வாசனா நிதியத்தின் அனுசரணையின் கீழ் ஜாதிக சம்பத லொத்தரை வெற்றிகொண்டவருக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு

- பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆண்டறிக்கையை கௌரவ அமைச்சருக்கு சமர்ப்பிக்கும் நிகழ்வு




கௌரவ அமைச்சருக்கு ஆண்டறிக்கையை சமர்ப்பித்தல்

## நிருவாகக் கட்டமைப்பு

1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வானா நிதியச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சிரம வாசனா நிதியம், தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருவதுடன், இதன் தவிசாளர் தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளராவார்.

சிரம வாசனா நிதியச் சட்டத்திற்கமைவாக சிரம வாசனா நிதியம் தொடர்புபட்ட முழுமையான நிருவாகப் பொறுப்புடன், சிரம வாசனா நிதியப் பணிப்பாளர் சபைக்கு உரித்தளிக்கப்பட்டுள்ளதுடன், இதன் முகாமைத்துவம் மற்றும் ஏனைய உரிய அனைத்துச் செயற்பாடுகளும் பணிப்பாளர்களுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ளது.

சிரம வாசனா நிதியப் பணிப்பாளர் சபை பின்வருமாறு.

**பணிப்பாளர் சபை – சிரம வாசனா நிதியம்**

| பெயர் | பதவி |
|---|---|
| திரு.டபிள்யு.ஜெ.எல்.யூ.விஜயவீர | **தவிசாளர்** |
| திருமதி.பேள்.வீரசிங்க | **அங்கத்தவர்** |
| திரு.ரஞ்ஜித் கெட்டியாராய்ச்சி | **அங்கத்தவர்** |
| திரு.யூ.லலித் சந்திரசிறி விக்கிரமசிங்க | **அங்கத்தவர்** |
| திரு.சீ.கே.எம்.ஜயதிஸ்ஸ | **அங்கத்தவர்** |
| திருமதி.எஸ்.டபிள்யு.சீ.ஜயமினி | **அங்கத்தவர்** |
| திரு.டி.ஆர்.ஜயலத் | **பொது முகாமையாளர் - சிரம வாசனா நிதியம்** |
| செல்வி.இ.டபிள்யு.ஏ.சீ.புண்யசிறி | **கணக்காளர் –தொழில் அமைச்சு** |
| திரு.டபிள்யு.ஆர்.எம்.நளின் அசங்க | **வியாபாரக் குறியீட்டு முகாமையாளர்** |
| | |

சிரம வாசனா நிதியம், தனியார் துறை மற்றும் அரசுசார் துறை ஓய்வூதியமற்ற பணியாளர்களுக்காக தாபிக்கப்பட்டதேயன்றி, சுயவேலைவாய்ப்பிலீடுபடுபவர்களை இச்சட்டம் உள்ளடக்கியிருக்கவில்லை. தற்போது பெரும்பான்மையான பணியாளர்களின் சேமநலனை மேம்படுத்துவதற்காக ஐந்து ஆண்டு கூட்டுத்திட்ட மொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

# சிரம வாசனா நிதியம்

# 2012

# இறுதிக் கணக்கு

## தொழில், தொழில் உறவுகள் அமைச்சு

சிரம வாசனா நிதியச் சபை

*2012 திசெம்பர் 31 இலுள்ளவாறு*

ஐந்தொகை

| | | | 2011 | | 2012 |
|---|---|---|---|---|---|
| | | | | | ரூபா |
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறைச்சொத்துக்கள் அல்லாதவை** | | | | | |
| பொறித் தொகுதியும் உபகரணமும் | குறிப்பு 1 | 527,723.17 | | 598,482.17 | |
| நிலையான வைப்புகள் முதலீடு | | 67,500,000.00 | 68,027,723.17 | 61,500,000.00 | 62,098,482.17 |
| **நடைமுறைச்சொத்துக்கள்** | | | | | |
| கையிருப்பு - விளம்பரப்படுத்தல் கையிருப்பு | | 78,908.25 | | | |
| ஏனைய பெறுகைகள் | குறிப்பு 2 | 119,234,191.00 | | 170,561,863.33 | |
| வங்கி மீதி | | 269,152.85 | 119,582,252.10 | 2,868,073.71 | 173,429,937.04 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | | **187,609,975.27** | | **235,528,419.21** |
| **தேறுமதிகள் மற்றும் பொறுப்புக்கள்** | | | | | |
| திரண்ட நிதியம் | குறிப்பு 4 | | 187,394,975.27 | | 234,601,914.65 |
| **நடைமுறைச்சொத்துக்கள்** | | | | | |
| ஏனைய கொடுப்பனவுகள் | குறிப்பு 5 | | 215,000.00 | | 926,504.56 |
| **தேறுமதிகள் மற்றும் பொறுப்புக்கள்** | | | **187,609,975.27** | | **235,528,419.21** |

| டபிள்யு.ஜெ.எல்.யூ.விஜயவீர | பீ.விரசிங்க | டி.ஆர்.ஜயலத் | இ.டபிள்யு.ஏ.பீ.புண்யசிறி |
|---|---|---|---|
| தவிசாளர் | பணிப்பாளர் | பொது முகாமையாளர் | கணக்காளர் |
| சிரம வாசனா நிதியம் | சிரம வாசனா நிதியம் | சிரம வாசனா நிதியம் | சிரம வாசனா நிதியம் |

சிரம வாசனா நிதியச் சபை
*2012 திசெம்பர் 31 இலுள்ளவாறு*
வருமான மற்றும் செலவினக் கணக்கு

| | | | | | ரூபா |
|---|---|---|---|---|---|
| | | | **2011** | | **2012** |
| *வருமானம்* | குறிப்பு 6 | | **46,646,919.78** | | **55,233,284.17** |
| கழிக்க: செலவினம் | | | | | |
| நிருவாகச் செலவினம் | குறிப்பு 7 | *3,325,884.26* | | *3,431,371.97* | |
| தேய்மானம் | குறிப்பு 8 | *114,362.87* | | *134,397.00* | |
| நிதியத்தின் இலக்குகளை அடைவதற்கான செலவினம் | குறிப்பு 9 | *2,988,505.72* | | *4,466,175.82* | |
| நிதியத்தின் மொத்தச் செலவினம் | | | **6,428,752.85** | | **8,031,944.79** |
| திரண்ட நிதியம் (2011 ஆம் ஆண்டுக்கான மிகை) | | | **40,218,166.93** | | **47,201,339.38** |

சிரம வாசனா நிதியச் சபை

*2012 திசெம்பர் 31 இலுள்ளவாறு*

**பண ஓட்டக்கூற்று**

| | | | |
|---|---|---|---|
| | | | ரூபா |
| 2012 ஆம் ஆண்டுக்கான மிகை | குறிப்பு 10 | | 47,206,939.38 |
| **சீராக்கல்** | | | |
| தேய்மானம் | | 134,397.00 | |
| முதலீட்டு வட்டி | | (5,428,381.92) | |
| அனர்த்த கடன் வட்டி | | (7,157.25) | (5,301,142.17) |
| செயற்படு மூலதன மாற்றத்திற்கு முன்னரான மிகை | | | 41,905,797.21 |
| கையிருப்பு கழிப்பனவு | | 78,908.25 | |
| ஏனைய பெறுகைகளின் அதிகரிப்பு | | (49,811,460.00) | |
| ஏனைய கொடுப்பனவின் கழிப்பனவு | | 711,504.56 | (49,021,047.19) |
| தொழிற்படு பண ஓட்டம் | | | (7,115,249.98) |
| **முதலீட்டுச் செயற்பாடுகள்** | | | |
| அசையாச் சொத்துக்களின் கொள்வனவு | | (205,106.00) | |
| முதலீட்டு வட்டி | | 3,912,169.59 | |
| அனர்த்த கடன் வட்டி | | 7,157.25 | |
| முதலீட்டு வட்டி | | 6,000,000.00 | |
| முதலீட்டு பண ஓட்டம் | | | 9,714,170.84 |
| 2012 ஆம் ஆண்டுக்கான பண ஓட்டம் | | | 2,598,920.86 |
| 2012.01.01 இலுள்ளவாறு பணமும் பணத்திற்குச் சமமானவையும் | | | 269,152.85 |
| 2012.12.31 இலுள்ளவாறு பணமும் பணத்திற்குச் சமமானவையும் | | | 2,868,073.71 |

## கணக்குக் குறிப்புகள்

### குறிப்பு 1

பொறித் தொகுதி, இயந்திரமும் உபகரணமும்

| | செலவு | மேலதிகங்கள் | பெறுமானத்தேய்வு | திரட்டிய பெறுமானத்தேய்வு | தேறிய பெறுமானம் |
|---|---|---|---|---|---|
| இயந்திரமும் உபகரணமும் | 240,480.00 | - | 24,048.00 | 52,912.00 | 187,568.00 |
| காற்றுச்சீராக்கிகள் | 97,185.00 | - | 3,380.00 | 87,044.00 | 10,141.00 |
| கணினிகள் | 429,776.00 | 26,558.00 | 73,146.00 | 303,401.50 | 152,932.50 |
| போட்டோப்பிரதி இயந்திரங்கள் | 96,187.50 | - | - | 96,186.50 | 1.00 |
| நிறைவேற்றதிகாரிகள் தளபாடங்கள் | 29,855.00 | 159,398.00 | 14,194.00 | 39,663.39 | 149,589.61 |
| அலுவலக உபகரணம் | 242,523.14 | 19,200.00 | 19,629.00 | 163,473.08 | 98,250.06 |
| | 1,136,006.64 | 205,156.00 | 134,397.00 | 742,680.47 | 598,482.17 |

### குறிப்பு 2

ஏனைய பெறுகைகள்

| | |
|---|---|
| திறைசேரி தொழிற்பாட்டு திணைக்களம் | 165,917,931.00 |
| பண்டிகை முற்பணம் | 6,000.00 |
| இடர் கடன் | 164,220.00 |
| நிலையான வைப்பு முதலீட்டின் மீதான வட்டி | 4,473,712.33 |
| | 170,561,863.33 |

### குறிப்பு 3

| | |
|---|---|
| 2012.01.01 இல் திரண்ட நிதியம் | 187,400,575.27 |
| 2012 ஆம் ஆண்டுக்கான மிகை | 47,201,339.40 |
| 2012.12.31 இல் திரண்ட நிதியம் | 234,601,914.67 |

குறிப்பு 4

ஏனைய கொடுப்பனவுகள்

| | |
|---|---|
| கணக்காய்வுச் செலவினங்களுக்கான ஏற்பாடு | 75,000.00 |
| சட்ட உதவிகளுக்கான ஏற்பாடு | 97,500.00 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 3,145.33 |
| செலுத்துவதற்குரிய தொலைபேசி பட்டியல் | 4,499.30 |
| செலுத்துவதற்குரிய பணியாளர் நலன்புரி | 619,921.70 |
| செலுத்துவதற்குரிய விளம்பரக் கட்டணங்கள் | 112,500.00 |
| செலுத்துவதற்குரிய மின்சாரம் மற்றும் நீர் | 13,938.23 |
| | 926,504.56 |

குறிப்பு 6

நிலையான சொத்துக்கள் பின்வருமாறு தேய்மானமிடப்பட்டுள்ளது

| | |
|---|---|
| இயந்திரமும் உபகரணமும் | 10% |
| காற்றுச்சீராக்கிகள் | 20% |
| கணினிகள் | 25% |
| போட்டோப்பிரதி இயந்திரங்கள் | 20% |
| நிறைவேற்றதிகாரிகள் தளபாடங்கள் | 8% |
| அலுவலக உபகரணம் | 8% |

*இறுதி ஆதனங்களின் பெறுமானத் தேய்வு பெறுமதி 1 ரூபா வரை பெறுமானத்தேய்விடப்பட்டுள்ளது.*

குறிப்பு 7

வருமானம்

| | |
|---|---|
| சிரம வாசனா லொத்தர் வருமானம் | 49,797,745.00 |
| நிலையான வைப்பு முதலீட்டின் மீதான வட்டி வருமானம் | 5,428,381.92 |
| இடர் கடன் வட்டி வருமானம் | 7,157.25 |
| | 55,233,284.17 |

குறிப்பு 8

நிருவாகச் செலவினம்

| | |
|---|---|
| தேனங்களும், சம்பளங்களும் | 946,209.41 |
| ஊ.சே.நி | 113,773.57 |
| ஊ.ந.நி | 28,443.39 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 42,383.26 |
| வாழ்க்கைச் செலவுப்படி | 395,466.45 |
| ஏனைய கொடுப்பனவுப் படிகள் | 60,000.00 |
| பணிப்பாளர் சபைக் கொடுப்பனவுப் படி | 48,000.00 |
| மிகையூதியம் | 50,000.00 |
| போக்குவரத்துப் படி | 8,164.00 |
| காகிதாதிகள் | 264,985.00 |
| எரிபொருள் | 254,195.00 |
| போக்குவரத்து அறவீடுகள் | 388,965.20 |
| தபால் செலவினங்கள் | 16,010.00 |
| தொலைபேசி செலவினங்கள் | 72,450.98 |
| நலன்புரி | 17,055.50 |
| கேளிக்கைச் செலவுகள் | 23,341.00 |
| சில்லறைச் செலவுகள் | 7,810.10 |
| கணக்காய்வுச் செலவுகள் | 25,000.00 |
| கணக்காய்வுக் குழுக் கூட்டக் கொடுப்பனவுப் படி | 18,000.00 |
| பதவியினர் பயிற்சிச் செலவு | 323,600.00 |
| மின்சாரம் மற்றும் நீர் | 326,399.11 |
| வங்கி அறவீடுகள் | 1,120.00 |
| | 3,431,371.97 |

குறிப்பு 9

**தேய்மானம்**

| | |
|---|---|
| கணினிகள் மீதான தேய்மானம் | *73,146.00* |
| காற்றுச்சீராக்கிள் மீதான தேய்மானம் | *3,380.00* |
| போட்டோப்பிரதி இயந்திரங்கள் மீதான தேய்மானம் | - |
| தளபாடங்கள், பொருத்துக்கள் மீதான யேமானம் | *14,194.00* |
| அலுவலக உபகரணம் மீதான தேய்மானம் | *19,629.00* |
| இயந்திரம் மீதான தேய்மானம் | *24,048.00* |
| | 134,397.00 |

குறிப்பு 10

**நிதியத்தின் இலக்கை அடைவதற்கான செலவினம்**

| | |
|---|---|
| பணியாளர்களின் சேமநலனை வழங்குதல் | *3,111,118.93* |
| பணியாளர்களுக்கெதிராக விசாரணைகள் மேற்கொள்கையில் அவர்களுக்கு தற்காலிக உதவி வழங்குதல் | *8,750.00* |
| விளம்பரப்படுத்தல் செலவினம் | *1,346,306.89* |
| | 4,466,175.82 |

குறிப்பு 11

| | |
|---|---|
| 2012 ஆம் ஆண்டுக்கான மிகை | |
| (+) திரண்ட நிதியத்திற்கான சீராக்கல் | *5,600.00* |
| 2012 ஆம் ஆண்டுக்கான மிகை (பண ஓட்டம்) | *47,206,939.38* |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No: எல்எஸ்/சீ/எஸ்வீஎப்/எப்ஏ/2012 | ඔබේ අංකය / உமது இல / Your No. | දිනය / திகதி / Date: 2013 ஒக்டோபர் 29 |

தலைவர்,
ஸ்ரம வாசனா நிதியம்

**ஸ்ரம வாசனா நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

ஸ்ரம வாசனா நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானச் செலவினக்கூற்று, காசுப் பாய்ச்சற்கூற்று மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1998 இன் 12 ஆம் இலக்க ஸ்ரம வாசனா நிதிய அதிகாரச்சட்டத்தின் 12(4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail.: oaggov@sltnet.lk

வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஸ்ரம வாசனா நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 சிறந்த கணக்கீட்டு நடைமுறைகள்**

நேர்கோட்டு முறைமையின் பிரகாரம் ரூபா 340,222 கிரயத்திலான குளிரூட்டி, கணனி, போட்டோ பிரதி இயந்திரங்கள் என்பன மீளாய்வாண்டின் இறுதி வரை இறுதிப் பெறுமதி ரூபா 1 வரை பெறுமானத்தேய்விடப்பட்டிருந்ததுடன் அச் சொத்துக்கள் மீள் பெறுமதியிடப்பட்டு புதிய ஆக்கபூர்வமான ஆயுட்காலம் இனங்காணப்பட்டு அதன் பிரகாரம் பெறுமானத்தேய்வு சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1998 இன் 12 ஆம் இலக்க ஸ்ரம வாசனா நிதிய அதிகாரசட்டம் | |
| (i) 6(அ) முதல் (ஏ) வரையான பிரிவுகள் | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்கு முரணாக ரூபா 781,332 தொகை விளம்பரச் செலவினமாகச் செலவிடப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ii) | 7(2)(1)(அ) மற்றும் 13(2) ஆம் பிரிவுகள் | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஸ்ரம வாசனா எனும் பெயரில் அதிஷ்டலாபச் சீட்டு அச்சிடப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக "ஜாதிக சம்பத" எனும் பெயரிலான ஓர் அதிஷ்டலாபச் சீட்டு அச்சிடப்பட்டிருந்தது. |
| (iii) | 10(ஈ) பிரிவு | அதிஷ்டலாபச் சீட்டை நடாத்துவதன் மூலம் கிடைக்கப்பெறும் வருமானம் நிதியத்திற்குக் கிடைக்கப்பெற வேண்டிய போதிலும் 2008 பெப்ரவரி 28 ஆம் திகதியின் பின்னர் அவ்வருமானம் திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்களத்தால் பெறப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் நிதிப் பிரமாணம்

---

| | | |
|---|---|---|
| (i) | நி.பி. 139(4) | விளம்பரச் செலவினமாக நிதியத்திலிருந்து செலவிடப்பட்ட ரூபா 1,346,307 தொகைக்காக முறையான பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (ii) | நி.பி. 139(8) | மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 381,000 தொகையான முற்பணங்கள் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நி.பி. 371 (2)(ஈ) | மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 121,000 தொகையான முற்பணங்களைத் தீர்ப்பதற்கு உரிய செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்டு ஒரு மாதத்திற்கும் மிகையான காலம் தாமதமடைந்திருந்தது. |

5

3. நிதிசார் மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், நிதியத்தின் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவு ரூபா 47,201,339 தொகையான மிகையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 40,218,167 ஆனமையால் ரூபா 6,983,172 தொகையான நிதிவிளைவில் அதிகரிப்பு காணப்பட்டது. மீளாய்வாண்டிற்கான செலவினம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் ரூபா 1.6 மில்லியன் தொகையால் அதிகரித்திருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 8.5 மில்லியன் தொகையால் அதிகரித்தமை இதற்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

4.1.1 நிதி மற்றும் பௌதீகச் செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது ஸ்ரமவாசன நிதியத்தின் செயற்பாட்டுத்திட்டம் மற்றும் செயல் முன்னேற்ற அறிக்கையைப் பரீட்சிக்கையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதி மற்றும் பௌதீக இலக்குகள் எய்தப்படுவதிலான செயல் முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| நிகழ்ச்சித்திட்டம்/ தொகுப்பு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பீட்டு இலக்கு | | அடைந்துகொள்ளல் (செயற்பாடு) | | அடைந்துகொள்ளலின் (முன்னேற்றம்) | |
|---|---|---|---|---|---|---|
| | நிதி | பௌதீக | நிதி | பௌதீக | நிதி | பௌதீக |
| | ரூபா மில். | நிகழ் | ரூபா மில். | நிகழ் | ரூபா மில். | நிகழ் |
| (i) தொழிநுட்பக் கல்வி நிகழ்ச்சித்திட்டம் | 0.6 | 20 | - | - | - | - |

(இந் நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை.)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (ii) | ஆவசர வேலைகளில் தொழில்வழங்குனருக்கு மருத்துவ மற்றும் ஏனைய வசதிகள் வழங்கல் | 1.0 | 20 நோயாளிகளுக்காக | - | - | - | - |
| | | | | (இந் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை.) | | | |
| (iii) | சட்ட உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் | 1.0 | 100 நபர்களுக்காக சட்ட உதவி வழங்கல் | 0.07 | 18 நபர்களுக்கு சட்ட உதவி வழங்கல் | 7% | 18% |

(ஆ) ஸ்ரமவாசன நிதி அதிகாரச் சட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டிராமை

---

1998 இன் 12 ஆம் இலக்க ஸ்ரமவாசன நிதிய அதிகாரச்சட்டத்தின் பின்வரும் கீழ் தரப்பட்டுள்ள நடவடிக்கைகள் நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| | பிரிவு | எய்தப்படாத கட்டளை |
|---|---|---|
| (i) | 6 (ஆ) பிரிவு | சேவை வழங்குனர்கள் சேவையில் ஈடுபட்டிருக்கையில் நிறுவகம் முன்னறிவித்தல் இன்றி முடப்பட்ட சந்தர்ப்பத்தின் போது அந் சேவை வழங்குனர்களுக்கு நிதி அல்லது வேறு உதவியளித்தல். |
| (ii) | 6 (இ) பிரிவு | அவசர சந்தர்பங்களில் சேவை வழங்குனர்களுக்கு மருத்துவ மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல். |
| (iii) | 6 (உ) பிரிவு | அவசர சந்தர்பங்களில் சேவை வழங்குனர்களுக்கு |

அல்லது அவர்களில் தங்கி வாழ்வோருக்கு நிதி மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்.

| | | |
|---|---|---|
| (iv) | 13 (1) பிரிவிற்கு | ஒவ்வொரு ஆண்டிலும் அச்சிடப்பட வேண்டிய லொத்தர்களின் எண்ணிக்கை மற்றும் வகை தொடர்பாக, லொத்தர் சபையுடன் உடன்பாட்டிற்கு வருதல். |
| (v) | 13(2) ஆம் பிரிவிற்கு | லொத்தரினால் வழங்கப்படும் பரிசு தொடர்பாகவும் உரிமை கோரப்படாத பரிசுகள் தொடர்பாகவும் செயற்பட்ட விதம் தொடர்பாக லொத்தர் சபையுடன் உடன்பாட்டிற்கு வருதல். |
| (vi) | 13(3) ஆம் பிரிவிற்கு | லொத்தரால் வழங்கப்பட வேண்டிய பரிசுப் பெறுமதி உள்ளடங்கலாக லொத்தர் சபையால் மேற்கொள்ளப்பட வேண்டிய செலவினம் தொடர்பாக நிதியம் மற்றும் லொத்தர் சபைக்கு இடையே உடன்பாடு ஏற்படுத்தப்படல். |

## 4.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் நோக்கங்களுக்கு முரணாக நிதியத்தால் வேறு நிறுவகங்களுக்கு ரூபா 1,102,000 தொகை பல்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டிருத்தல்.

(ஆ) 2012 ஆம் ஆண்டிற்கான மூன்று மருத்துவ சிகிச்சைகளுக்காக செயற்பாட்டுத்திட்டத்தின் பிரகாரம் ரூபா 1.5 மில்லியன் தொகையான மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அது பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் படி ரூபா 782,000 ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது இதன் உள்ளபடியான செலவினம் ரூபா 602,293 ஆகக் காணப்பட்டது. 2012

8

மார்ச் 03 ஆம் திகதி நடாத்தப்பட்ட மருத்துவ சிகிச்சைக்காக உணவு கொள்வனவு செய்யப்பட்டு அதற்காகக் கொள்வனவுக் குழுவின் மேல் அங்கீகாரம் 2012 ஏப்ரல் 19 ஆம் திகதியே பெறப்பட்டிருந்தது. இங்கு உணவிற்காக தற்போதைய சந்தை விலைகளைப் பார்க்கிலும் கூடிய விலைகள் செலவிடப்பட்டிருந்தன. பிலியன்தலையில் நடாத்தப்பட்ட சிகிச்சைக்காக வருகை அறிக்கையின் பிரகாரம் 28 பேரின் வருகை உறுதிப்படுத்தப்பட்டு 50 பேரைப்பார்க்கிலும் கூடிய நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டிருந்தது.

**5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02 ஆம் திகதிய பீசடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவகத்தின் தூரநோக்கும் செயற்பணியும் நிறைவேற்றப்படுவதற்காக 03 ஆண்டுகளுக்கு குறையாத காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 செயற்பாட்டுத்திட்டம்**

கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் மேற்கொள்ளப்படுவதற்காக வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டின் போது நிதியத்தின் உள்ளகக் கணக்காய்விற்காக ஒரு கணக்காய்வாளர், தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சினூடாக நியமிக்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

6. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிதியத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) முற்பணக் கொடுப்பனவுகள்
(ஈ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு

டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*Ms/v*